[1981 ஆகஸ்ட் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:—

''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 59/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முதப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்மிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

8. அரசினர் தீர்மானம்

உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்கள் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் 24-8-1981 ஆம் தேதியன்று வைக்கப் பெற்ற தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய * வெள்ளை அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (26-8-1981) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

* 433ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.